உ



# திருமுறைத் தொகுப்பு

திரு. பொன்னையா செல்லையா

அவர்களின்

சிவபதப் பேற்றின்

## நினைவு மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குத் தாயாகவும்,
தந்தைக்குத் தந்தையாகவும்,
குருவுக்குக் குருவாகவும்,
என்னை வளர்த்து ஆளாக்கி
தான் செய்த புண்ணியங்களால்
எனக்கு நல்வாழ்வு கிடைக்க
வழியமைத்துக் கொடுத்த
என் அன்புத் தந்தைக்கு
எனது அன்புக் காணிக்கை.

செல்லையா இராசதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பொன்னையா செல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிள்ளையார் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

2. நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீ றணிதிரு மேனி
வரைசெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைசெழு சந்தும் கார்அகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

## திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

## போற்றித் திருத்தாண்டகம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமலத் தயனோடு மாலுங்காணு
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

## சுந்தரமூர்த்தி நாயனுர் அருளிய
## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

1. நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி யோர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

2. நீளநினைந் தடியேன்உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளனகண் மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்சில நெல்லுப்
பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணியே.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
## திருவாசகம்

### திருச்சிற்றம்பலம்

1. பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆயசிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

1 ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடும் கூடிஎம்
மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

1. உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலா வியநீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பவளமால் வரையிற் பனிபடர்ந் தனையதோர்
படரொளி திருநீறும்
குவள மாமலர் கொன்றையும் கண்ணியும்
துன்று பொற் குழல்திருச் சடையும்
திவள மாளிகை சூழ்திரு தில்லையுட்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொதி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடு படியவர் புத்தியி லுறைபவன்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடை வினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செயத அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

2. இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே.

## பொன்வண்ணத்தந்தாதி
(சேரமான் பெருமாள்)

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன், செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலை அமைத்தேன், கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் (கு) அன்பு அமைத்தேன், மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற் கிவையான விதித்தனவே

## பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் அஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே

## இராமலிங்க சுவாமிகள்
## அருட்பா

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தனித்தநறும் தேன் பெய்து, பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலும் சேர்த்து ஒருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே இளஞ் சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திருந்தேன் அமுதே!
அறித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத்தரசே !
அடிமலர்க்கு என்சொல் அணியாம அலங்கலனிந்தருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர் பாடல்

கல்லேனும் ஐய ஒருகாலத்தில் உருகும் என்
 கல்நெஞ்சம் உருக இலையே !
கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
 கற்பிக்க ஒரு கடவுளோ ?
வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெரு
 வழக்குக்கு இழுக்கும் உண்டோ ?
வானமாய் நின்று இன்பமழையாய் இரங்கி எனை
 வாழ்விப்பது உன்பரங்காண்
பொல்லாத சேய் எனில் தாய் தள்ளல் நீதமோ ?
 புகலிடம் பிறிதும் உண்டோ
பொய்வார்த்தை சொலமிலா திருஅருட்குஅயலுமாய்ப்
 புன்மையேன் ஆவன் அந்தோ !
சொல்லால் முழக்கிலா சுகமிலலே மௌனியாய்ச்
 சுமமா இருக்க அருளாய்
அத்த நற்குணமான பரதெய்வமே பரஞ்
 சோதியே! சுக வாரியே ;

## கந்தர் அலங்காரம்

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்போன் வெய்யவாரணம்
 போல்
கைதானிருபது டையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள பயந்த இலஞ்சியமே

## கந்தர் அனுபூதி

எந்தாயும் எனக்(கு) அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனை ஆள்
கந்தா ! கதிர்வேலவனே ! உமையாள்
மைந்தா ! குமரா ! மறை நாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜப்பத்து

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருகொண்ட
கவலென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாறுதச் சூழலிலே
கட்டுண்டு நித்தம் நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாம லிரவு பகலும்
உண்டுண்டு றங்குவதை கண்டதே யல்லாது
ஒரு பயனடைந் திலேனே
தடமென்ற மிடிகரையில் பந்த பாசங்களெனும்
தாபரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தனியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று யேனென்று கேளா
திருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

## மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் பெருமையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே!
அகநதைக் கழுங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்ப ருளக் கோயிற் கேற்றும்
விளக்கே! வளர் சிமய
இமயப் பொருங்கில் விளையாடும் இளமென்
பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன்
திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே!
மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இளவஞ்சிக கொடியே!
வருகவே
மலையத் துவசன் பெற்ற பெருவாழ்வே!
வருக வருகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை ஒழித்துப்
பெருவாழ்வும்
பேறுங்கொடுக்க வரும் பிள்ளைப் பெருமான்
என்னும் பேராளா !
சேரா நிருதர் குல கலகா ! சேவற்கொடியாய்
திருச்செந்தூர்த்
தேவா ! தேவர் சிறைமீட்ட செல்வா !
என்றுன் திருமுகத்தைப்
பாராமகிழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து
விருப்புடன் அப்
பா ! வா, வா என்று உனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வர அழைத்தால்
வாராது இருக்க வழக்குண்டோ ? வடிவேல் முருகா !
வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளிகணவா !
வருகவே

## அபிராமி அந்தாதி

மனிதருந் தேவருமாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே கொன்றைவார்
சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரு நீயுமென் புத்தி யென்னுளும் பொருந்துகவே

## சரஸ்வதி தோத்திரம்

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய் படைப்போன்
முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமாவளி

ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்
ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம் ஓம்சக்திஓம்

சுந்தர வதன சுகுண மஞ்சரி
மந்தகாச முடைமதி வதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம் சக்தி)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே. (ஓம் சக்தி)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தலயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம் சக்தி)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான சோதிஸ் வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி விரதம்

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித் (து) ஓங்கும்,
நிஷ்டையுங் கைகூடும்; நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரர்இடர் தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயல்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து;
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக, மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா! வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன்! வருக.
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக,
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண, வீரா! நமோநம,
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக;
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர்ஐயும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக;
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் (து) அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து,
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதி யென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க;
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க;
பன்னிரு விழியால் பாலனைக் காக்க;
அடியேன் வதனம் அழகுவேல் காக்க;
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க;
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க;
விரிசெவி யிரண்டும் வேலவர் காக்க;
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க;
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க;
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க,
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க,
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க,
மார்பை இரத்ன வடிவேல் காக்க,
சேரிள முலைமார் திருவேல் காக்க,
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க,
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க,
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க,
பழுபதி னாறும் பருவேல் காக்க,
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க,
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க,
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க,
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க,
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க,
வட்டக் குதத்தை வடிவேல் காக்க,
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க,
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க,
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க,
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க,
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக,
நாபிக் கமலம் நல்வேல் காக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க,
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க,
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க,
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க,
அறையிருள் தன்னில் அனையவேல் காக்க,
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க,
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க,
காக்க காக்க கனகவேல் காக்க,
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க,
பார்க்க பார்க்க பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல;
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்;
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
யிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்,
பெண்களைத் தொடரும் பிரமராக் சதரும்,
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட;
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கன பூசை கொள்ளும் காளியோட டனைவரும்
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட;
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும். பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்,
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும், ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்,
ஓதும்அஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட;
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட,
வாய்விட் டலறி மதிகெட் டோட,
படியினில் முட்ட, பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய,
கட்டு கட்டு கதறிடக் கட்டு;
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட,
செக்கு செக்கு செதில் செதிலாக,
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு,
குத்து குத்து கூர்வடி வேலால்,
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக,
விடு விடு வேலை வெருண்டது வோட;
புலியும் நரிவ்யப் போத்தொடு நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோட;
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
சடுவிட விஷங்கள் கடித்துய ரங்கப்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க;
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்!
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க, உன் திருநாமம்;
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரபுர பவனே! பவம்ஒளி பவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா! அமராவதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்;
கந்தா! குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனிய வேல்முருகா!
தணிகாசலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பாலா குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யானுனைப் பாட,
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக,
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரக்ஷி; அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க! வாழ்க! வாரணத் துவசன்!
வாழ்க! வாழ்க! என் வறுமைகள் நீங்க;
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவன் நீ குரு! பொறுப்பது உன் கடன்;
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே;
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்;
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி,
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்;
மாற்றரல் ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்,
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்,
எந்த நாளும்மீரெட்டா வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்.
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனுல்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி!
தேவர்கள் சேனு பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே,
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

இறைவா ! இறைவா !

என்னை நீ தெய்விக அமைதிக்காக ஒரு கருவியாக ஆக்கிவிடு !

வெறுப்பு இருக்கிற இடத்திலெல்லாம் அன்பை விதைக்க வேண்டும்.

தீமை திகழ்கின்ற இடத்தில் மன்னிப்பையும் —

சந்தேகம் இருக்கின்ற வட்டாரத்தில் நம்பிக்கையும் —

கலக்கம் ஏற்படும் இடத்தில் உறுதியையும் —

இருள் பிறந்த படர்ந்த நிலத்தில் ஒளியையும் —

துயரம் நிறைந்த பூமியில் மகிழ்ச்சியையும் நான் விதைப்பேனாக.

தெய்வீக சாம்ராஜ்யத்தின் தலைவனே !

நான் உன்னைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான்.

நான் ஆறுதலோடு இருக்கிறேனா என்பதல்ல முக்கியம். அடுத்தவர்களுக்கு நான் ஆறுதல் தருகிறேனா என்பதே முக்கியமானதாகும்.

நான் உலகத்தால் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேனா என்பதைவிட உலகத்தை நான் தெரிந்து கொண்டேனா என்பதே என் பிரச்சினையாகும்.

என்னை அடுத்தவர்கள் நேசிக்கிறார்கள் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. அடுத்தவர்களை நான் நேசித்தபடி இருக்கவேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கையாகும்.

ஆண்டவனே! கொடுப்பதால்தான் நாம் பெறுகிறோம் என்பதும் —

மன்னிப்பதால்தான் நாம் மன்னிக்கப்படுகிறோம் என்பதும் —

இறப்பதால்தான் நாம் புதிதாகப் பிறந்து நிலையான வாழ்வு பெறுகிறோம் என்பதும் —

நான் அறிந்த தத்துவங்களாக இருப்பதால் என்னுடைய கோரிக்கையை நீ ஏற்றுக்கொள்வாயாக!

இறைவா! நான் உன்னுடைய பிள்ளை!

குமரன் அச்சகம், டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org